<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 283/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W. 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ்கண்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கோபால் சாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.09.2025.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கோவை மாவட்டம் பெரியநாயக்கன் பாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 22.04.2022 ம் தேதி நிலைய அலுவலில் இருந்த உதவி ஆய்வாளர் சம்பத்குமார் என்பவரிடம் நிலைய உதவி ஆய்வாளர் சரவணக்குமார் கொடுத்த தனியறிக்கையின் பேரில் பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 222/2022 ச/பி 353,341 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அசல் ஆவணங்களை தளம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து அதன் மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.
2. நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை

7.00 மணயளவில் சம்பவ இடம் சென்று குமார் மற்றும் வேல்முருகன் ஆகியோர் முன்னிலையயில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மாதிரி வரைபடம் அசா.ஆ.4 என்றும் பார்வை மகசர் அசா.ஆ.5 என்றும் குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் சாட்சிகள் சரவணகுமார் உதவிஆய்வாளர், தலைமை காவலர் சேகர், முதல் நிலை காவலர் கோவிந்தராஜ், முதல் நிலைக் காவலர் பத்ரா ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடி புலன் வைத்த போது முதலாவது எதிரி பப்பிஸ் என்பவர் வாகன விபத்தில் அடிபட்டு 3 11 2022–ம் தேதி இறந்து விட்டதால் அவரது பிரேத பரிசோதனை சான்று பெற்றேன் பிரேத பரிசோதனை சான்று அசா.ஆ. 6 என்று குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மற்றொரு எதிரியான நவீன் என்கின்ற நவீன் குமாரை 23 11 2022 ஆம் தேதி உடுமலை எஸ் எஸ் காலனி பஸ் நிறுத்தம் அருகில் கைது செய்து திரேக பரிசோதனைக்கு பின் தக்க இரு நபர் ஜாமினில் விடுவித்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் சம்பத் குமார் என்பவரை விசாரித்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. உதவி ஆய்வாளர் சம்பத்குமார் வழக்கு கோப்பை எத்தனை மணிக்கு உங்களிடம் சமர்பித்தார் என்றால் காலை 6.00 மணிக்கு. அன்றைய தினம் தேர் எத்தனை மணிக்கு கிளம்பி எத்தனை மணிக்கு நிலைக்கு வந்தது என்றால் சரியாக ஞாபகம் இல்லை சுமார் 10.00 மணிக்கு முன்னதாக வந்தது. வழக்கில் சாட்சி சரவணக்குமர் பத்ரா கோவிந்தராஜ் ஆகியோருக்கு பணி ஒதுக்கப்பட்டதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், பாஸ்போர்ட், பொது நாட்குறிப்பு அனைத்து நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும்., நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

2. பொதுவாக திருவிழாவின் போது குற்ற தடுப்பு நிகழா வண்ணம் வீடியோ எடுப்பது வழக்கம் என்றால் சரிதான். காலமான பப்பீஸ் என்பவரின் மெய்காப்பாளரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகாரானது 5 மணிநேரம் காலதாமதம் என்றால் சரிதான். சரவணக்குமார் இரவு பணியில் இருந்ததால் பணி முடித்துவிட்டு வந்து கொடுத்தார். முதல் தகவல அறிக்கை 22.04.2022 ம் தேதி பதிவு செய்து 17.05.2022 ம தேதி நீதிமன்றத்திற்கு

அனுப்பப்ப்டுளளது என்றாலும் காலதாமதம் காரணம் குறித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 14 ல் புகார்தாரரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பொதுவாக சாலை மறியல் போராட்டம் நடந்தால் உடனே கைது செய்து அப்புறப்படுத்த வேண்டும்என்றால் சூழ்நிலை பொறுத்து நடவடிக்கைளடுக்கப்படும். திருவிழாவின் போது தளி ரோட்டில் போக்குவரத்து முற்றிலும் தடை செய்யப்பட்டிருக்கும் என்றால் தேர் நிலைக்கு வரும் வரை போக்குவரத்து தடை செய்யப்பட்டிருக்கும். தனியறிக்கையில் மற்றும் சிலர் என்று உதவி ஆய்வாளர் தந்துள்ளநிலையில் மேற்படி சிலர் என்று விசாரித்து தெரிந்து கொண்டிர்களா என்றால் சிலர் பற்றி விசாரணை தேவைப்படவில்லை, அங்கு நிறைய பேர் இருந்திருந்தார்கள், சிலர் பற்றிய விவரம் யாரும் கொடுக்கவில்லை. பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் யாரும் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதாக எதிரிகது எதிராக புகார் கொடுககவில்லை என்றால் சரிதான். போக்குவரத்துக்கு இடையூறு என்று எந்த வாகன ஓட்டிகளும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தனியறிக்கையில் சொல்லியது போல் பக்தர்களுக்கு இடையுறு ஏற்பட்டதாக சொல்லியுள்ளநிலையில் அதில் உள்ள பக்தர்கள் பற்றி விசாரித்து தெரிந்து கொண்டிர்களா என்றால் இல்லை. எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக வீடியோ பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த சம்பவ இடத்தில் பதிவு எடுக்காததால் நான் பதிவு செய்யவில்லை. வீடியோ தனிப்பட்ட முறையில் எடுப்பார்கள் என்றாலும் திருவிழாவின் போது மக்கள் கூடும் இடங்கள் மற்றும தேர் பவனி வரும் இடங்களில் நிலையான வீடியோக்கள் இருக்கும என்றால் அனைத்து பகுதியிலும் இருக்காது, எங்களால் தனிப்பட்ட முறையில் திருவிழாவில் வீடியோக்கள் எடுக்கப்பட்டாலும் வேறு இடத்தில் வீடியோக்கள் எடுக்க பட்டுக் கொண்டிருந்ததால் சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் வீடியோ எடுக்கப்படவில்லை. அன்றைய தினம் திருவிழா தொடங்கி முடியும் வரை வீடியோக்கள் எடுக்கப்பட்டு கொண்டு இருந்தன என்றாலும் வழக்கிற்கு பாதகமாகும் என்பதால் மேற்படி வீடியோ எடுக்கப்படவில்லை என வழக்கிற்காக சாட்சியம் அளித்து அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. தேர் ஜாமியா பள்ளி வாசல் வழியாக வரும் என்றால் சரிதான் . பப்பீஸ் என்பவர் இந்து முன்னணி கட்சியை சேர்ந்தவர் என்பதால் பப்பீஸ் மற்றும் மாநில தலைவர்களை மேற்படி பள்ளி வாசல் வர கூடாது என்று சொன்னதால் அவர்கள் அந்த வழியாக வந்ததால் பின்னிட்டு ஏன்

வந்தார்கள் என்று சரவணக்குமார் கொடுத்த பொய்யான தனியறிக்கையை பெற்று உரிய முறையில் புலன் விசாரணை செய்து வழக்காவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயாரித்து இந்த எதிரியின் மீது பொய்யான இறுதி அறிக்கை தயார் செய்துள்ளிர்கள் என்றால் சரியல்ல. பார்வை மகசரில் யார் சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பார்வை மகசர் சாட்சிகள் குமார் மற்றும் வேல்முருகன் காவல் நிலையத்தின் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. பப்பீஸ் என்பவரின் மெய்காப்பாளர் சம்பவ நடந்த போது எந்த அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் சம்பவ நடந்திருந்தால் அவர் அறிக்கை தாக்கல் செய்திருப்பார் என்றாலும் அவரை விசாரித்திருப்பிர்கள் என்றாலும் அவர தனியாக அறிக்கை சமர்பிக்கமாட்டார்கள். பொதுவாக கம்மேன் போடும் போது தினந்தோறும் நடக்கும் சம்பவம் குறித்து SHO க்கு அறிக்கை தரவேண்டும் என்றால் சரிதான். 2 ம் எதிரி இந்து முன்னணியில் இருப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவிலலை என்றால் சரிதான். உண்மையில் 2 ம் எதிரி இந்து முன்னணி கட்சியில் இல்லை என்றால் அது பற்றி தெரியாது. 2 ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் தனிப்பட்ட சாட்சிகளை நீங்கள் விசாரித்திருப்பிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.